Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT<br>TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.564/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.4 |
| | | Defence | |
| Name | | திரு.ராமராஜ் | |
| Father's Name | : | திரு.பாண்டியராஜ் | |
| Village | : | நடுவக்குறிச்சி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(கண்கண்ட சாட்சி) | |
| Age | : | 44 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of July 2026.

(1,4,5,6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது நடுவக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் முருகன், ராமச்சந்திரன், சிவனம்மாள், அபினாஷ், மனோஜ்குமார், சிவன், ராமகிருஷ்ணன், மீனாட்சிசுந்தரம், செல்லச்சாமி, மாடசாமி ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன சசிக்குமார் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத 3 வது எதிரி ராஜம்மாளை தெரியும். இறந்துபோன 2 வது எதிரி அழகுபாண்டியன் என்பவரையும் தெரியும். நான் திருநெல்வேலி

மார்கெட்டில் காய்கறிகளை ஏற்றிவரும் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தேன். கடந்த 27.03.2022ம் தேதி அன்றையதினம் மார்க்கெட் லீவு என்பதால் நான் எனது ஊருக்கு செல்லமுடியவில்லை. அப்போது என்னுடன் பணிபுரிந்த சசிக்குமார் நீங்கள் என் வீட்டிற்கு வந்து தங்கிக்கொண்டு மறுநாள் ஊருக்கு செல்லாம் என்று சொன்னார். நான் அவர் வீட்டிற்கு சென்று இரவு சாப்பிட்டுவிட்டு வீட்டிற்கு வெளியே வந்தோம். அப்போது பிள்ளையார்கோவிலுக்கு அருகில் ஊருக்கு சொந்தமான இடத்தில் பாலமுருகன் சேட் போட்டுயிருந்தார். அந்த சேட்டை இறந்துபோன சசிக்குமாரும் அவருடன் சேர்ந்தவர்களும் சேதப்படுத்தியாக புகார் கொடுத்துவிட்டார்கள். அதனால் சசிக்குமாருக்கும், பாலமுருகனுக்கும் பிரச்சனையாகி, எதிர்ப்பாகிவிட்டார்கள். பின்னர் 22.04.2022ம் தேதி பிள்ளையார்கோவில் பக்கத்தில் நானும், முருகனும் பேசிக்கொண்டிருக்கும்போது பிள்ளையார்கோவில் பக்கத்தில் பாலமுருகன், சங்கரநாராயணன், ராஜம்மாள், அனிதா ஆகியோர் அவர்களது கார் சேட்டை சேதப்படுத்திய சசிகுமாருக்கு தக்கபதிலடிகொடுக்கவேண்டும். இனி அவர் உயிரோடு இருக்கக்கூடாது என சொல்லிக்கொண்டிருந்ததை கேட்டு எனக்கு பதற்றமாகிவிட்டது. நான் வீட்டிற்கு சென்று தூங்கிவிட்டு காலை 5.00 மணிக்கு ஊருக்கு போய்விட்டு, மறுநாள் நான் சசிக்குமாருக்கு வண்டியில் போகும்போது மேற்படி விசயத்தை சொன்னேன். அவர் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டார். கடந்த 24.04.2022ம் தேதி நானும், முருகனும் உறவினர் வீட்டு விசேஷத்திற்கு சென்றுவிட்டு நானும் முருகனும் தச்சநல்லூர் புதுப்பாலம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அப்போது பாலமுருகனும், சங்கரநாராயனும் பைக்கில் வந்தார்கள்,

சங்கரநாராயணனை அந்த இடத்தில் இறக்கிவிட்டார். அந்த சமயத்தில் முருகன் எதுவும் பிரச்சனையாகி விடப்போகிறது என்று சொன்னார். அப்போது மார்க்கெட்டில் இருந்த கூட்டம் வெளியே வேகமாக வந்தது. முருகன் முன்னாடி ஓடிக்கொண்டிருந்தார். நான் பின்னாடியே ஓடினேன். அப்போது பாலமுருகன் ரத்தக்கறையுடன் அரிவாளை வைத்துக்கொண்டு வேகமாக ஓடிவந்தார். நான் உள்ளே ஓடிச்சென்றுபார்த்தபோது சசிக்குமார் ரத்தவெள்ளத்தில் கீழே கிடந்தார். அவர் உயிருக்கு போராடிக்கொண்டிருந்ததை பார்த்து நானும், முருகனும் 108 க்கு போன் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். என்னிடம் காட்டப்படும் அரிவாளை தான் பாலமுருகன் வைத்திருந்தார். அது **சா.பொ.1** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

எனது சொந்த ஊர் நடுவக்குறிச்சி. நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்றால் சொந்தமாக வண்டி வைத்து காய்கறி லோடு எடுக்கும் வேலை பார்க்கிறேன். நான் தச்சநல்லூர் மார்க்கெட்டிற்கு வாடிக்கையாக காய்கறி இருக்குவேனா என்றால் யாராவது சொன்னால் வந்து இறக்குவேன். வாரத்தில் எத்தனை நாள் எனக்கு வேலை இருக்கும் என்றால் தச்சநல்லூருக்கு வாரத்தில் 2 அல்லது 3 நாட்கள் கொண்டு செல்வேன். காய்கறி சந்தைக்கு வார லீவு என்று என்றால் விடுமுறை சனிக்கிழமையாக இருக்காலம். ஞாயிற்றுக்கிழமை வேலை நாள் என்றால் சரிதான். பாலமுருகனுக்கு சொந்தமான இடத்தை சசிக்குமாரும், அவருடன்சேர்ந்தவர்களும் சேதப்படுத்தியாக சொல்லும் சம்பவம் நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. சசிக்குமார் சொல்லி தான்

தெரியும். முருகன் யார் என்றால் அவர் சசிக்குமாருக்கு உறவினர். அதன் மூலமாக அவர் எனக்கு பழக்கம் என்றால் எப்போதாவது ஊருக்கு சென்றுவருவதால் பழக்கம். வாரத்தில் 2, 3 நாட்கள் லோடு இறக்க செல்ல எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வருவீர்கள் என்றால் அதிகாலை 5.00 மணிக்கு, சிலநேரங்களில் மதியவேளை 2.00 மணிக்கு செல்வோம். லோடு ஏற்ற எவ்வளவு நேரமாகும் என்றால் இரண்டுமணிநேரத்தில் லோடு ஏற்றிவிடுவார்கள். லோடு ஏற்றியபின்பு எங்கள் ஊருக்கு சென்றுவிடுவோம். அதிகாலை மற்றும் மாலை வேளை என்றாலும் 2 முதல் 3 மணிநேரத்திற்குள் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிடுவோம். 27.03.2022 ம் தேதி பிள்ளையார்கோவில் பக்கம் செல்லும்போது தான் எதிரிகள் பேசியதை கேட்டேன் என்றால் சரிதான். எத்தனைமணிக்கு நான் கேட்டேன் என்றால் இரவு 10.30 மணிக்கு கேட்டேன். யார், யார் கேட்டோம் என்றால் நானும், முருகனும் கேட்டோம். முருகன் எவ்வாறு சசிகுமாருக்கு உறவினர் என்றால் நெருங்கிய உறவினர் தான். நான் சம்பவத்தை கேட்டுவிட்டு சசிக்குமார் வீட்டிற்கு சென்று துாங்கசென்றுவிட்டோம். மேற்படி சம்பவம் சம்மந்தமாக சசிக்குமாரிடமோ, அவரது மனைவியிடமோ அல்லது காவல்துறையினரிடமோ புகார் கொடுத்தேனா என்றால் சசிக்குமாரிடம் 28.03.2022 அதிகாலை 4.30 மணிக்கு சசிக்குமாரிடம் விவரத்தை சொல்லிவிட்டேன். 24.04.2022 எனது அத்தை மகளுக்கு பாளையங்கோட்டை முருகன்குறிச்சியில் கல்யாணம் நடந்தது. எந்த மண்டபம் என்றால் மண்டபம் பெயர் தெரியவில்லை. எத்தனை மணிக்கு பங்ஷனுக்கு சென்றோம் என்றால் மதியம் 1.00 மணிக்கு சென்றோம். அங்கு முருகனை 4.00-4.30 மணிக்கு பார்த்தேன். பின்னர் என்னுடைய

வாகனத்தில் முருகனுடன் முருகன்குறிச்சியில் இருந்து ஜங்ஷனுக்கு 4.30 மணிக்கு சென்றோம். முருகன்குறிச்சியில் இருந்து ஜங்ஷனுக்கு நேரடியாக 3 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். பிள்ளையார் கோவில் பக்கம் எதிரிகள் சதித்திட்டம் தீட்டிய விவரம் குறித்து போலிசாரிடம் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. பின்னர் நாங்கள் ஜங்கஷனில் இருந்து கிளம்பும் போது எத்தனைமணி இருக்கும் என்றால் மாலை 5.30 மணியிருக்கும் இருட்டிவிட்டது. ஜங்கஷனில் இருந்து தச்சநல்லூர் செல்ல பைக்கில் சென்றால் 10 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். பின்னர் நான் ஊருக்கு சென்றேனா என்றால் இல்லை. சசிக்குமார் இறந்துவிட்டால் அரசுமருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். எப்போது சென்றேன் என்றால் இரவு 7.00 மணியளவில் சென்றேன். சம்பவம்தொடர்பாக நான் நேரடியாக எதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம்தொடர்பாக நான் நேரடியாக பார்க்காததால் யாராவது சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் குறித்து என்னிடம் யார் நேரடியாக சொன்னார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு எனது வாக்குமூலத்திலோ, முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சசிக்குமார் எனக்கு எவ்வளவு நாள் பழக்கம் என்றால் ஒருவருட பழக்கம். நெருக்கமான பழக்கம் என்றால் சரிதான். முருகன், சசிக்குமாரின் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். சசிக்குமார் எனக்கு நெருங்கிய பழக்கம் என்பதாலும், முருகன், சசிக்குமாரின் உறவினர் என்பதாலும் சசிக்குமார் இறந்ததால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தச்சநல்லூர் புதுப்பாலம் அருகே நின்றுகொண்டிருந்தபோது பாலமுருகன் ஓடிவரும்போது எனக்கும், பாலமுருகனுக்கும் இடையில் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 20

அடி தூரம் இருக்கும். கூட்டம் கூடி ஓடிவந்த காரணத்தினாலும், பரபரப்பாக இருந்த காரணத்திலும் அரிவாள் இப்படி தான் இருக்கும் என்று நுணுக்காமாக இருக்கும் என்று சொல்லமுடியாது என்றால் அரிவாள் மொட்டையாக இருக்கும். அவ்வாறு அரிவாள் மொட்டையாக இருந்த காரணத்தினால் தான் தற்போது நீதிமன்றத்தில் காட்டிய அரிவாளை இப்படி தான் இருக்கும் என்று ஊகமாக சொன்னேன் என்றால் சரிதான். ஞாயிற்றுக்கிழமைகளிலும் தச்சநல்லூர் காய்கறி சந்தை கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். நான் வெளியூர் என்பதால் சசிக்குமாரின் பழக்கம் காரணமாக இரவு 10.30 மணிக்கு பிள்ளையார்கோவில் பக்கம் எதிரிகளை பார்த்தாக சொல்வதும், அவர்கள் பேசியதை கேட்டதாக சொல்வதும், சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்திலேயே இல்லாதபோதும் பொதுமக்கள் சொல்லியதன்பேரில் நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளியூர் என்பதால் ஆஜர் எதிரிகள் எனக்கு எந்த வகையிலும் பழக்கம் இல்லை. ஆஜர் எதிாகளை எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவர்களின் பெயர் விவரங்கள் தெரியாது. சசிக்குமார் சொன்னதன்அடிப்படையில் பாலமுருகன் பெயர் மட்டும் தெரியும். நான் எதிரிகளை சம்பவத்திற்கு முன்னர் நேரடியாக பழக்கமா என்றால் இல்லை. நான் எதிரிகளை இதுவரை பார்த்தது இல்லைஎன்றும், சசிக்குமார் சொன்னதன் அடிப்படையில் பாலமுருகன் என்ற பெயர் மட்டும் தெரியும் என்றும், கேள்விப்பட்டவிவரத்தின் அடிப்படையில் தான் ஓடிவந்தார் பாலமுருகன் என்பது தெரியும் என்றும், நான் பொய்யாக சாட்சயிம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.564/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.5 |
| | | Defence | |
| Name | | திரு.ராமச்சந்திரன் | |
| Father's Name | : | திரு.வேலுச்சாமி | |
| Village | : | சுப்பையாபுரம் | |
| Taluk | : | மானூர் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(கண்கண்ட சாட்சி) | |
| Age | : | 48 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of July 2026.

(1,4,5,6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது சுப்பையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் சிவனம்மாள், அபினேஷ், செல்லச்சாமி, மாடசாமி, முருகன் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன சசிக்குமார் எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி ராஜம்மாள் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். இறந்துபோன எதிரி அழகுபாண்டி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். கடந்த 27.03.2022 ம் தேதி எங்கள் ஊரில் கோவிலுக்கு

அருகில் உள்ள கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். அதை சசிகுமார் மற்றும் 9 நபர்கள் ஆக்கிரமிப்பு குறித்து கேட்டார்கள். அதற்கு எதிரிகள் மானூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்காகிவிட்டது. அவ்வாறு வழக்கானது முதல் சசிக்குமார் மீது பயங்கர விரோதமாக இருந்தார்கள். இந்த வழக்கில் இருந்து வெளியே வந்தபின்னர் சசிக்குமாரை பாலமுருகன் மற்றும் இருவர் மார்க்கெட்டிக்கு சென்றுவரும்போத தேவர்குளம் ரோட்டில் வைத்து விரட்டியதாக எனது தம்பி என்னிடம் போனில் சொன்னான். பின்னர் மார்க்கெட்டில் வைத்து அவர்களது செட்டை சேதப்படுத்தியதன் காரணமாக சசிக்குமாரை சும்மாவிடமாட்டேன் என்று பாலமுருனும், அவரது வீட்டில் உள்ள ஆட்களும் மிரட்டியதாக எனது தம்பி என்னிடம் சொன்னார். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கசொன்னேன். சசிக்குமார் புகார் கொடுக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார். அதன் பின்னர் சசிக்குமார் மார்க்கெட்டிற்கு வந்த சமயத்தில் அவரை அசிங்கமாக பேசி கழுத்தில் மிதித்து எதிரி பாலமுருகன் வெட்டியதாக கேள்விப்பட்டேன். பாலமுருகன் சசிக்குமாரை வெட்டியபிறகு சுப்பையாபுரத்தில் மேற்படி பாலமுருகன் வீட்டிற்கு போலிசார் முழுவதுமாக பாதுகாப்பு கொடுத்தார்கள். அதன்பின்னர் அவரது அம்மாவை கைது செய்து போலிசார் அழைத்து சென்றார்கள். எதிரிகளை கைது செய்தால் தான் சவத்தை வாங்குவோம் என்று போராட்டம் செய்தோம். சார்பு ஆட்சியர் வந்து பேசி சமாதானம் செய்து முடித்து எதிரிகளை கைது செய்தார்கள். நாங்கள் பிரேதத்தை பெற்றுக்கொண்டோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

எங்கள் ஊர் சுப்பையாபுரம் என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கூலிவேலை பார்க்கிறேன். இரும்பு வியாபாரம் என்ன வேலை கிடைத்தாலும் செய்வேன். இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்ட சிவனம்மாள், அபினேஷ், ராமச்சந்திரன்,சிவன், ராமகிருஷ்ணன், மீனாட்சிசுந்தரம் ஆகியோர்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள். ஒரு சிலர் நெருங்கிய பழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கடந்த 27.03.2022 ம் தேதியில் பாலமுருகன் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் உள்ள மரங்களை சேதப்படுத்தியாக எங்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் மானூரில் கொடுக்கப்பட்டது. யார் மீது கொடுக்கப்பட்டது என்றால் சசிக்குமார் உடன் 9 பேர் மீதும் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார் மனுவிற்கு இரண்டுநாட்கள் பிறகு பாலமுருகன் சசிக்குமாரை விரட்டியதாக என்னிடம் போனில் சொன்னார் என்றால் சரிதான். அவ்வாறு வெட்ட விரட்டியது சம்மந்தமாக நான் காவல்நிலையத்திலோ அல்லது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலோ புகார் மனுகொடுத்தேனா என்றால் இல்லை. அவரது மனைவிக்கு உடல்நிலைசரியில்லாததால் அவரை கூட்டிக்கொண்டு சென்று புகார் கொடுக்கமுடியவில்லை. 27.03.2022 ம் தேதிக்கு பிறகு தொடர் கொலைமிரட்டல் விடுத்தது சம்மந்தமாக நானோ, சசிக்குமாரோ காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. கொடுக்க சொன்னோம் ஆனால் சசிக்குமார் புகார் கொடுக்கவில்லை. சசிக்குமார்

கொலை சம்மந்தமாக நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் நேரில் பார்க்காததால் எனக்கு விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார் மூலமாக சசிக்குமார் வெட்டுப்பட்டார் என்ற விவரத்தை எனது போலிசார் விசாரணையிலோ, எனது முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி 24.04.2022ம் தேதி ஆகும். மேற்படி தேதியன்று நான் எங்கிருந்தேன் என்றால் கேரளாவில் இருந்தேன். 27.03.2022ம் தேதி கொடுத்த புகார் மனுதொடர்பாக எனது தம்பி சசிக்குமாருக்கும், பாலமுருகனும் பிரச்சனை இருந்ததால் சசிக்குமாரின் மரணத்திற்கு பாலமுருகன் தான் காரணம் என்று அன்றையதினத்தில் காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டதாலும், அவர் மீது குண்டர் சட்டம் போடத்தாலும் தான் உறுதியாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது தம்பி வெட்டியதாக கேள்விப்பட்டேன் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எப்போது கேரளாவில் இருந்து வந்தேன் என்றால் இரவு 12.00 மணிக்கு கேரளாவில் இருந்து வந்தேன். அவ்வாறு வந்து நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து மதியம் 2.00 மணியளவில் புகார் மனுகொடுத்தேன். சம்பவடம் நடந்து 3 நாட்கள் கழித்து 27.04.2022ம் தேதி மதியம் புகார் மனுஅளித்தவுடன் தச்சநல்லூர் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். விசாரிக்கமட்டும் தான் செய்தார்கள். கையெழுத்த எதுவும் பெறவில்லை. ஊர்நிலப்பிரச்சனை காரணமாக ஏற்பட்ட புகாரில் நான் ஒரு நபரா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு விவரம் தெரியாது என்றும் நான் ஊரில் இருந்து வந்தபின்னர் போலிசார் சொன்னதன்அடிப்படையிலும்,

இறந்த நபர் எனது சகோதரர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.